

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.10.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை இயக்குநர் எஸ்.கணேஷ், மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ.) எஸ்.சுதா, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநர் அ.சுந்தரம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஆய்வு!

முதல் பக்கத் தொடர்ச்சி

பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பாலாஜி நகர் மருத்துவ முகாம்**

பருவமழை காலத்தில் பொது மக்களுக்கு நோய்தொற்றுகள் ஏற்படாமல் பாதுகாத்திடும் பொருட்டு பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் குமரன் நகர் சாலையில் உள்ள பாலாஜி நகரில் மருத்துவ முகாமினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இம்முகாமில் 12 மருத்துவர்கள் கொண்ட குழு சிகிச்சை அளித்து வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு முட்டை, ரொட்டி, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

**தணிகாசலம் கால்வாய்!**

தொடர்ந்து, அயனாவரம் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயில், கூடுதலாக உபரி நீர் செல்லும் வகையில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!**

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் சென்னை, பெரம்பூர், செம்பியம், ராகவா தெருவில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. புத்துயிர் சிறப்புப் பள்ளியில் பயிலும் 70 மாற்றுத்திறனாளி குழந்தை களின் நலன் மற்றும் பள்ளியின் மேம்பாட்டிற்காக 2 கணினிகள், 1 பிரிண்டர், 2 இரும்பு பீரோ, அத்தியாவசியப் பொருட்கள், என 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், அச்சிறப்பு பள்ளியின் தாளாளர் டாக்டர் எட்வின் ராஜ்குமார் அவர்களிடம் பள்ளி மேம்பாட்டிற் காக நிதி யுதவியும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!**

பின்னர், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் உள்ள காமராசர் சத்திரத்தில், 600 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள், அரிசி, ரெயின் கோட், புடவை, பெட்ஷீட் (போர்வை), ரஸ்க், பால் பவுடர், துவரம் பருப்பு, மிளகாய்த்தூள், சமையல் எண்ணெய், லுங்கி உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, தூய்மைப் பணியாளர்களுக்கு பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை முதலமைச்சர் அவர்கள் அன்புடன் பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமை! அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலை! கோவை – சரவணம்பட்டி மாமன்ற உறுப்பினர்

# எஸ்.பூங்கொடி - சோமசுந்தரம் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - ஆ.இராசா எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. வாழ்த்துரை!

### மு.கண்ணப்பன் – நா.பழனிச்சாமி – நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் பங்கேற்பு!

கோவை, அக்.19-

கோவை மாவட்டம், குரும்பபாளையம், நரையான் தோட்டம் எஸ். வேலுச்சாமி - வி.ராஜேஸ்வரி ஆகியோரின் புதல்வர் வி.ஜெய்குமாருக்கும், கோவை மாவட்டம், சரவணம்பட்டி, தெற்காலக்காடு பி.சோமசுந்தரம் - 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பூங்கொடி - சோமசுந்தரம் ஆகியோரின் புதல்வி எஸ்.பத்மபிரியாவுக்கும் மணவிழா வரவேற்பு 21.10.2024 - திங்கள்கிழமை மாலை 5 மணியளவில் கோவை, சத்திசாலை, குரும்பபாளையத்தில் அமைந்துள்ள குறிஞ்சி மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமை வகிக்கிறார்.

அமைச்சர் சு.முத்துசாமி, முன்னாள் அமைச்சர்கள் மு.கண்ணப்பன், பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் தொ.அ.ரவி, நா.கார்த்திக், தளபதி முருகேசன், பகுதிச் செயலாளர் சிரவை சிவா (எ) பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, அரசு தலைமை கொறடா கா. இராமச்சந்திரன், கணபதி ராஜ்குமார் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் ஆர்.ரங்கநாயகி ராமச்சந்திரன், ரா.வெற்றிச் செல்வன், பி.கந்தசாமி, கே.கோமளவள்ளி, ரா. மாலதி எம்.சி., இரா.கதிர் வேலுசாமி, வேடகதிர் வேல், எஸ்.மாணிக்கம் (எ) மருதாசலம்.

எல்.ரங்கசாமி, யாஸ்மின்சேட், சி.முத்துசாமி, கவிதா, சௌந்தர் ராஜன், ரங்கசாமி, கண்ணன், சச்சிதானந்தம், வனஜா, நடராஜன், ஆனந்தன், கிழக்குத்திமுத்து, கருணாநிதி, பத்மநாபன், தங்கவேலு, கிருஷ்ணவேணி, கருப்பண்ணன், விஜியகுமார், செந்தில், சுப்பிரமணியம், பாலசுப்பிரமணி, மதியழகன், முரளி, தர்மராஜ், பொன் ராணி, வெற்றிவேல், தனசேகர், வின்சென்ட், தர்மலிங்கம், ஆனந்தசேகர், தனபால் டேனியல், சிங்காரவேலு, சுதர்சன், பானுப்பிரியா, செழியன், ஐயப்பன், சாத்தப்பன், மாலதி, மாரியப்பன், சாமிகண்ணு, நாகரத்தினம், செந்தில்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

பி.சோமசுந்தரம் நன்றி கூறுகிறார்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் பேச்சுப்போட்டி!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. - கோபி பரிசுகள் - சான்றிதழ்களை வழங்கினர்!

கிருஷ்ணகிரி, அக். 19 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்தூரில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப்பட மற்றும் நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகளை கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் சி.கோபி தொடங்கி வைத்து பரிசுகளை வழங்கினார்கள்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.எஸ் சங்கர் தலைமை தாங்கினார்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார் இந்நிகழ்ச்சியில், மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தில், மத்தூர் ஒன்றிய கழக செயலாளர் குண.வசந்தரசு, பொதுக்குழு உறுப்பினர் கோதண்டன், அணியின் துணை அமைப்பாளர்கள் மோதிலால், ஆனந்தன், கிரிதர், கார்த்திகேயன், மோகன், முரசொலி.பார்த்திபன், சுந்தரராசன், சிவகுமார், அரவிந்தன், தேவராஜ், ஜவகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. மாநில கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் துணைச் செயலாளரும் மண்டலப் பொறுப்பாளருமான கே.வி.குப்பம் சி. கோபி ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார்கள். இந்த போட்டியில் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது கவிதைகள், திரைப்படம் மற்றும் நாடகங்களின் வசனங்களை ஒப்புவித்தனர். இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ், நினைவு பரிசு, ரொக்க பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில்

சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய கழக செயலாளர் ரஜினி செல்வம், மத்தூர் ஒன்றிய குழு தலைவர் லட்சுமி பெருமாள் , பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, புஷ்பா , இளையராஜா , பாலாஜி , மோகன், காந்தி, ஜீவானந்தம், ஜெயக்குமார் , சத்தியநாராயண மூர்த்தி , மற்றும் அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி , லயோலா ராஜசேகர், மகேந்திரன், எஸ்.எஸ்.சங்கர், சுரேந்தர், சின்னத்தாய், மணிமொழி, சந்தோஷ் குமார் , மதன் ராஜ் , ராமமூர்த்தி கமல் நாதன், சுரேஷ்குமார், ஊராட்சி மன்ற தலைவர் கதிர்வேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளர் ரங்கன் நன்றி உரையாற்றினார் .

இந்த நிகழ்வை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி சிறப்பான ஏற்பாடு செய்திருந்தது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மத்தூரில் கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் திரைப்பட மற்றும் நாடக வசனங்கள் ஒப்புவித்தல் போட்டிகளுக்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் அமைப்பாளர் எஸ்.எஸ் சங்கர் தலைமை தாங்கினார். மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் தணிகை ஜி.கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார் கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை செயலாளர் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் சி.கோபி தொடங்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் பரிசுகளை வழங்கினார்.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; " நீட் எழுதாமலே எடப்பாடி ஆட்சியில் 5000 டாக்டர்கள்" என்று திண்டுக்கல் சீனிவாசன் பேசியிருக்கிறாரே?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; நீட் தேர்வு தமிழ் நாட்டுக்குள் நுழைந்ததே எடப்பாடி ஆட்சியில்தானே!**

**உண்மைநிலை இப்படி இருக்க சீனிவாசன் ஏன் இப்படி அளந்து விடுகிறார் ?**

**எடப்பாடி கட்சியில் சீனிவாசன் இருக்கும் வரை, இப்படிப்பட்ட நகைச்சுவைக்கு அங்கே பஞ்சம் உண்டோ ?**

# மாற்றமும் ஏற்றமும்!

மழை வெள்ளம் சூழ்ந்ததால் என்ன
மக்களைக் காப்பதற்கு?
தலைவர்நம் ஸ்டாலின் உள்ளார்
தளபதி வடிவம் கொண்டு!

கடைக்கோடி மக்கள் கூட
கண்ணீர் சிந்தாமல் காப்பார்
தடை - கோடி வந்த போதும்
தளராமல் வென்று தீர்ப்பார்!

தளபதி ஸ்டாலின் அன்று...
தலைவர்நம் ஸ்டாலின் இன்று!
உளமெலாம் சிலிர்க்க நாட்டை
உயர்த்திடும் தலைமை நன்று!



கவிஞர் **மு.மேத்தா**





திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் துரை வைகோ எம்.பி. தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் அருண் நேரு எம்.பி., ஜோதிமணி எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்நிகழ்வில் மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி. மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன். மாநகர காவல் துணை ஆணையர் செல்வகுமார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வருண்குமார். சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன் , செ.ஸ்டாலின் குமார் , எம்.பழனியாண்டி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ராஜலட்சுமி. ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி. மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன். நகராட்சி. பேரூராட்சி மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

